போட்டி நிலையினை உயர்த்தவும், உற்பத்தி மற்றும் செயல்திறனை அதிகரிக்கவும் சிறந்த சாலைக் கட்டமைப்பானது அவசியமாகிறது. நெரிசலற்ற போக்குவரத்து மற்றும் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யும்பொருட்டு, புதிய பாலங்கள், வட்டச் சாலைகள், புறவழிச் சாலைகள் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவிப்பு செய்துள்ளார்கள்.

அன்பு என்பது மூன்றெழுத்து, அறிவு என்பது மூன்றெழுத்து, துணிவு என்பது மூன்றெழுத்து. அன்பு, அறிவு, துணிவு என்ற மூன்றையும் தன்னகத்தே நிறைவாகப் பெற்றுள்ள (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் 'அம்மா' என்பது மூன்றெழுத்து. (மேசையைத் தட்டும் ஒலி). அம்மா அவர்கள் இன்றைக்கும், என்றைக்கும் பெறப்போகும் 'வெற்றி' என்பது மூன்றெழுத்து. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு முத்தான மூன்று அறிவிப்புகளை வெளியிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மீண்டும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012-2013 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் (குறுக்கீடுகள்) நாளைக்கு அதுகுறித்துப் பேசலாம். நான் தற்போது உங்களுக்கு பேச அனுமதி கொடுக்கவில்லை.* Please sit down. *நீங்கள், எனது அறைக்குக் காலையில் வந்து சொன்னீர்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய அறைக்குக் காலையிலே வந்து இதுசம்பந்தமாகச் சொல்லியிருக்கிறீர்கள். நான் இதை நம்பி சில கருத்துகளைச் சொல்லியிருக்கிறேன்,* Please sit down. *(குறுக்கீடுகள்).* Please sit down. *(குறுக்கீடுகள்) நான் சில கருத்துகளைச் சொல்லியிருக்கிறேன்; வினாக்கள்-விடைகள் முடிந்த பிறகு, விதி 110-ன்கீழ் அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கிய பிறகு, மாண்புமிகு இரண்டு அமைச்சர்களுக்கான மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு இருக்கின்றன. (குறுக்கீடு)* Please sit down. *திரு க. பாலகிருஷ்ணன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அ. சவுந்தரராசன் உட்காருங்கள். (குறுக்கீடு) இன்று*

[திரு. சி.த. செல்லப்பாண்டியன்] [2012 மே 9

காலையில்தான், நீங்கள் என்னிடம் சொன்னீர்கள். நான் சில கருத்துகள் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் காலையில்தான் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். Please sit down. திரு. அ. சவுந்தரராசன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) காலையில்தான் நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் உட்காருங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள், Please. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. க. பாலகிருஷ்ணன் (குறுக்கீடுகள்) உட்காருங்கள் (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள், Please. (குறுக்கீடுகள்) நான் இவ்வளவு சொல்லியும் நீங்கள் கேட்கவில்லையென்றால் எப்படி? நீங்கள் வெளிநடப்புச் செய்யவேண்டுமென்ற நோக்கத்தில் வந்திருக்கிறீர்கள். இன்று காலை என்னுடைய அறைக்கு நீங்கள் வந்தபோது, இது குறித்து நான் தெளிவாக சில கருத்துகள் சொல்லியிருக்கிறேன். அந்தக் கருத்தின் அடிப்படையிலே (குறுக்கீடுகள்) நீங்கள் காலையிலே என்னுடைய அறைக்கு வந்தபோது நான் உங்களுக்குத் தெரிவித்துள்ளேன். நான் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் நீங்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Zero Hour முடிந்துவிட்டது.

முற்பகல் 11-45

நீங்கள் காலையிலே என்னைச் சந்தித்தபோது தெரிவித்தக் கருத்துகளின்படி வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். தயவு செய்து உட்காருங்கள், திரு. இரா. அண்ணாதுரை. (குறுக்கீடுகள்) நான் உங்களுக்கு பேச அனுமதி கொடுக்கவில்லை. Zero Hour முடிந்து, அடுத்த business-க்கு நான் சென்றுவிட்டேன். தயவு செய்து உட்காருங்கள்.

(இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

5. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012–2013 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக்